**செய்தி வெளியீடு எண்: 2070** **நாள்:17.11.2022**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு அரசின் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் இன்று (17.11.2022) புதுடெல்லியில் நடைபெறும் 41வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2022 ல் தமிழ்நாடு நாள் விழாவைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.**

புதுடெல்லியில் நடைபெறும் 41–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி 2022 முன்னிட்டு பிரகதி மைதானத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கில் இன்று (17.11.2021) நடைபெற்ற "**தமிழ்நாடு நாள் விழா**"வை தமிழ்நாடு அரசின் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப்பிரதிநிதி புதுடெல்லி திரு.ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் முன்னிலையில் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு (2022) நடைபெறும் 41–வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியினை கடந்த 14.11.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாண்புமிகு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொதுவிநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் திரு. பியூஸ்கோயல் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்று தங்களது அரசின் வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றை காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "உள்ளூருக்கான குரல், உள்ளூர் முதல் உலகளாவியது"– Vocal for Local, Local to Global ஆகும். இதன் வாயிலாக நம் தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்கள் உலக அளவில் சந்தைப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இக்கண்காட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சுற்றுலாத்துறை, பூம்புகார், காதித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் ஆகிய துறை சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னோடி திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், மகளிருக்கான இலவசப் பேருந்து, இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் குறித்தும் அரசின் சாதனைகள் குறித்த புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் இத்துறையின் கீழ் செயல்படும் ஒன்பது அரசு நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம், தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், தமிழ்நாடு கனிமவள நிறுவனம் மற்றும் வழிகாட்டி நிறுவனம் ஆகியவை முக்கியப் பங்காற்றுகிறது. தொழில் துறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான, 2030–31 ஆம் நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சியடைய செய்யவும், தொழில் துறையில் புதிய முயற்சிகள் மூலம் உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திடவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்னிறுத்தி தொழில் துறையிலுள்ள ஒன்பது நிறுவனங்களின் கட்டமைப்பு முன் மாதிரிகள், சிப்காட் தொழிற் பூங்காவில் உள்ள தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் வாகனங்களின் மாதிரிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், டிட்கோ நிறுவனத்தின் கீழ் செயல்படும் திருப்பூரில் உருவாக்கப்படும் டைடல் நியோ பூங்காவின் கட்டடம் முன் மாதிரி காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட நிறுவனங்களின் தயாரிப்புப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஒன்பது நிறுவனங்களின் செயல்பாடுகள், நடவடிக்கைகள், திட்டங்கள், புதிய முயற்சிகள், புதிய கட்டட வசதிகள் ஆகியவை தொடர்பான குறும்படங்கள் மூன்று மின்னனு விளம்பரத்திரைகள் மூலமாக தொடர்ந்து திரையிடப்படுகின்றன.

வேளாண்மைத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் பாரம்பரிய நெல் சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் 50க்கும் மேற்பட்ட நெல் வகைகள், சிறு தானிய வகைகள், அதன் மதிப்புக் கூட்டப்பட்டுள்ள பொருட்கள், சிறு தானியங்களால் உருவாக்கப்பட்ட தேர் மற்றும் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ள உழவர் செயலி, வேளாண்மை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் செங்குத்து தோட்டம் போன்ற மாதிரிகளும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் போன்றவையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை சார்பில், அத்துறையினால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலம் காதி தயாரிப்புகளான பனங்கற்கண்டு, பனைவெல்லம், சுக்குக்காப்பித் தூள் மற்றும் சுக்கு மிட்டாய், பனை ஓலை கைவினைப் பொருட்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும், பூம்புகார் நிறுவனம் தங்களது தயாரிப்புகளையும் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் போன்றவையும் விற்பனைக்கு உள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரங்கினை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப்பிரதிநிதி அவர்கள் மற்றும் உயர் அலுவலர்களும் இன்று(17.11.2022) பார்வையிட்டார்கள். அதன் பிறகு நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

"தமிழ்நாடு அரசின் சார்பில் ஏறத்தாழ 13 அரசு துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கம் மிக சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்

திட்டங்கள் எந்த அளவுக்கு செயல்பாட்டுக்கு வந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது. மக்கள் கற்று அறிவதைக் காட்டிலும், கண்டு மகிழ்வதே நிலைக்கும் என்பதற்கேற்ப, அரசினால் நடத்தப்படும் பொருட்காட்சிகளின் முக்கிய நோக்கமே அனைத்துத் தரப்பு மக்களையும் அரசுத் துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் சென்றடையச் செய்வதை நோக்கமாக கொண்டே செய்தி மக்கள் தொடர்புத் துறை அரும்பணிகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகிறது. பொதுமக்கள் பல்லாயிரக்கணக்கானோர் பார்த்து கண்டு களித்து வருகின்றனர்.இப்பொருட்காட்சிகளில் மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன என்று குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினை சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் தமிழ்நாடு நாள் விழா இன்று (17.11.2022) பிரகதி மைதானத்தில் உள்ள திறந்தவெளி கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவினை, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை உள்ளுறை ஆணையர் டாக்டர் அதுல்ய மிஷ்ரா, இ.ஆ.ப., உள்ளுறை ஆணையர் திரு. ஆசிஷ் சாட்டர்ஜி இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர்/துணைச் செயலாளர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் உள்ளுறை ஆணையர் திரு.என்.இ. சின்னத்துரை கூடுதல் இயக்குநர்கள் திரு. மு.பா. அன்புச்சோழன், திரு. பி.முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத் துறையின் சார்பில், தமிழ்நாட்டில் புகழ்பெற்ற பரதநாட்டியம், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் பொய்க்கால் குதிரை, கொக்களிகட்டை ஆட்டம், மூங்கில் பாதம், ஒயிலாட்டம் மற்றும் காவடியாட்டம் ஆகிய கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் டெல்லியில் வசிக்கும் தமிழர்கள் உட்பட, பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

---------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in